# க.பொ.த. (சா.தர) உதவிக் கருத்தரங்கு - 2015
## தமிழ் மொழியும் இலக்கியமும் I
## புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இலக்கம் | விடை இலக்கம் | வினா இலக்கம் | விடை இலக்கம் |
|---|---|---|---|
| (1) | 1 | (21) | 3 |
| (2) | 1 | (22) | 1 |
| (3) | 4 | (23) | 4 |
| (4) | 3 | (24) | 3 |
| (5) | 1 | (25) | 2 |
| (6) | 4 | (26) | 4 |
| (7) | 3 | (27) | 1 |
| (8) | 2 | (28) | 3 |
| (9) | 3 | (29) | 4 |
| (10) | 1 | (30) | 2 |
| (11) | 2 | (31) | 4 |
| (12) | 1 | (32) | 1 |
| (13) | 3 | (33) | 2 |
| (14) | 4 | (34) | 1 |
| (15) | 2 | (35) | 1 |
| (16) | 3 | (36) | 4 |
| (17) | 1 | (37) | 3 |
| (18) | 2 | (38) | 3 |
| (19) | 1 | (39) | 1 |
| (20) | 1 | (40) | 1 |

**1 புள்ளி × 40 = 40 புள்ளிகள்**

பக். 2 ஐப் பார்க்க.

# க.பொ.த. (சா.தர)
# உதவிக் கருத்தரங்கு - 2015
# தமிழ் மொழியும் இலக்கியமும் II
# விடையளித்தல் தொடர்பான வழிகாட்டி

| | | |
|---|---|---|
| வினா 01 | சுருக்க விடைகள் | 20 புள்ளிகள் |
| 02 | கட்டுரை | 25 புள்ளிகள் |
| 03 | சுருக்கம் | 10 புள்ளிகள் |
| 04 | கிரகித்தல் | 10 புள்ளிகள் |
| 05 | விளம்பரம்/ கடிதம் | 15 புள்ளிகள் |
| | | 80 புள்ளிகள் |

## வினா இல. 01 : சுருக்கமான விடைகள்

(i) ஆவி போல் ஆடையும் ஒன்று ஆனதே

(ii) பொருத்தமான வாக்கியங்கள் இறை - இறைவன் / அரசன் (பெயர்)
இறை - இறைத்தல் (வினை)

(iii) அறுபத்தொரு இறாத்தல் இருக்கின்றது கங்காணி.

(iv) பாரதியார் குயில் பாட்டைப் பாடினார். / குயில்பாட்டைப் பாரதியார் பாடினார்.

(v) நாயக்கர் காலத்தில் பள்ளு, உலா, கலம்பகம் போன்ற நூல்கள் தோன்றின.

(vi) நான் மணம் வீசும் மாலையை அணிந்த வீமனுடைய அழிவில்லாத குலத்தில் உதித்தவள். /
மணம் வீசும் மாலையை அணிந்த வீமனுடைய அழிவில்லாத குலத்தில் நான் உதித்தவள்.

(vii) பாடிமகிழ்ந்தனர், படித்து முடித்தான்.

(viii) தாழை - தென்னைமரம்
தாழை - தாழை மரம், தாழம் பூ

(ix) ஒற்றுமை - இரண்டும் சுயகூற்றாக அமையும்.
வேற்றுமை - இரண்டும் அமைப்பில் வேறுபடும். அதாவது தற்சார்புக் கட்டுரை சொந்த அனுபவங்கள் அபிப்பிராயங்கள், உணர்ச்சிகள் என்பவற்றை விளக்கியும் விமர்சித்தும் எழுதுவது. சுயசரிதை என்பது தமது சொந்த வாழ்க்கை வரலாற்றை அல்லது தன்னை ஒன்றாகப் பாவனை செய்து அதன் வாழ்க்கை வரலாற்றை எழுதுவது.

(x)
- கடவுள் வாழ்த்து
- சபை வணக்கம்
- கதை ஆரம்பம்
- கதை வளர்ச்சி
- முடிவு
- மங்களம் பாடுதல்

**(2 x 10 = 20 புள்ளிகள்)**

பக். 3 ஐப் பார்க்க.

## வினா இல. 02 : கட்டுரை எழுதுதல்

| | | புள்ளித்திட்டம் |
|---|---|---|
| அ. | பொருளமைவும் அளவும் | 12 புள்ளிகள் |
| ஆ. | கருத்து வெளிப்பாடும் மொழிச்செம்மையும் | 06 புள்ளிகள் |
| இ. | கட்டுரை நுட்பங்கள் | 05 புள்ளிகள் |
| ஈ. | தலையங்கம் | 02 புள்ளிகள் |
| | | 25 புள்ளிகள் |

(அ) பொருத்தமானலைப்பு : ஒற்றுமையும் நாட்டின் அபிவிருத்தியும் /
நாட்டின் அபிவிருத்திக்கு ஒற்றுமையின் அவசியம்
(இவை போன்ற பொருத்தமான தலைப்புகள்)

முகவுரை :

தொடருரை :
- ஒற்றுமையின்மை நாட்டின் அபிவிருத்தியைப் பாதித்தல்.
- ஒற்றுமை நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் முறை

முடிவுரை : தொகுத்துக் கூறல், சொந்தக் கருத்துக்களை முன்வைத்தல்.

(ஆ) ★ மேடைப்பேச்சு தலைப்புகள்
- தொற்றுநோய்களும் தொற்றா நோய்களும்
- நோய் வருமுன் காப்போம்
- மனித நடத்தைகளும் நோய்களும்
- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

(இவை போன்ற பொருத்தமான தலைப்புகள்)

★ சொற்பொழிவு வடிவத்தில் அமைந்திருத்தல்
- சபையோரை விளித்தல்
- இடையிடையே சபையோரை முன்னிலைப்படுத்தல்
- தர்க்க ரீதியாகவும் ஒழுங்காகவும் கருத்துக்களை முன்வைத்தல்
- தொகுத்துரைத்து நிறைவு செய்தல்
- மேடைப்பேச்சுக்குரிய அமைப்பு பேணப்படல்

★ நோய்கள் பற்றிய அறிமும்

தொற்றுநோய்கள் - டெங்கு, வாந்திபேதி, அம்மை, கண்நோய்கள்

தொற்றா நோய்கள் - இருதயநோய், புற்றுநோய், நீரிழிவு, சிறுநீரக நோய், இரத்த அழுத்தம், தைரொய்ட்

தடுக்கும் முறைகள்
- ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்கள்
- தீய பழக்கவழக்கங்களிலிருந்து விலகுதல்
  உ-ம் : மதுபானம், புகைபிடித்தல், போதைவஸ்து
- உடற்பயிற்சி, நாளாந்த செயற்பாடுகளைச் சீராக்கிக் கொள்ளுதல்.

★ முடிவுரை - தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

பக். 4 ஐப் பார்க்க.

(இ) தலைப்பு : இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்/ சிறுவர் நலன் பேணுவோம்.
(இவைபோன்ற பொருத்தமான தலைப்புகள்)

உரையாடல் அமைப்பு :
- உரையாடலுக்குரிய அமைப்பு பேணல்.
- கருத்துக்களின் தொடர்ச்சி பேணப்படுதல்.
- பேச்சுமொழியும் இடம்பெறலாம்.
- தலைப்புடன் பொருந்துதல்.

உரையாடலில் இடம்பெற வேண்டியவை :
சிறுவர்களின் முக்கியத்துவம் / சிறுவர் உரிமைகள்
- உரிமைகள், பாதுகாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம்
- துஷ்பிரயோகங்கள் தவிர்க்கப்பட்டு சிறந்த உடல், உள மனவெழுச்சியுடன் கூடிய சிறுவர்களை உருவாக்குவதன் அவசியம்.
- நாளைய சமுதாயம் நற்பண்புகள் மிக்கதாக விளங்க செய்ய வேண்டியவை

(ஈ) சிறுகதை
தலைப்பு : அக்கரைப்பச்சை / தூரத்துப் பச்சை
(கதைப் போக்கிற்கேற்ப பொருத்தமான தலைப்புகள்)
- சிறுகதை அமைப்பு பேணப்படல்
  - வழங்கப்பட்ட குறிப்புகளுக்கமைய எழுதப்படல்
  - கதைக்கருவை சுவைபட நகர்த்திச் செல்லல்

## வினா இல. 03 : சுருக்கம்

**சுருக்கத்தில் இடம்பெறவேண்டிய முக்கிய கருத்துகள் -**

- ஒவ்வொருவரும் தத்தமது கொள்கைக்கும் மனப்பக்குவத்துக்கும் ஏற்ப சமூகத்தோடு இணைந்து வாழ்கின்றனர். இந்த வகையில் மூவகைப்பட்டவர்களைக் காணலாம்.
- இவர்களுள் முதலாமவன் தன்னைப் பற்றி மட்டும் சிந்திப்பவன்.
- இவனைவிட மேலானவன் ஒருவன் உளன் ; அவன் துறவி எனப்படுவான் ; கேடுகளில் இருந்து தப்பித்துக்கொள்ள உலகைத் துறக்கிறான்.
- இவனை விட மேலானவனாகக் கருதப்படுபவன் சீர்திருத்தவாதியாவான். இவன் சமூகக் குறைபாடுகளை நீக்க எண்ணுபவன். இதற்காக போதித்தல், வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல், பலருடன் சேர்ந்து சமூக சீர்திருத்தங்களில் ஈடுபடுதல் போன்வற்றில் ஈடுபடுகிறான்.

**(10 புள்ளிகள்)**

**முக்கிய குறிப்பு**

- சொல்லளவு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.
- சொந்த மொழிநடை
- ஒரு பந்தியில் எழுதப்படல்
- தேவையற்ற விடயங்களை நீக்கி எழுதுவதல்.

பக். 5 ஐப் பார்க்க.

## வினா இல. 04 : கிரகித்தல்

(i) அழகை ஒரு பெண்ணாக உருவகித்துக் காட்டியுள்ளார்.

(ii) உழவனின் தோற்றப் பொலிவு
அவனது மகிழ்ச்சியான / பூரிப்பான உள்ளம்
காலைப் பொழுது உழவனிடம் காணும் சுறுசுறுப்பு என்பவற்றை கவிஞர் உழவனிடத்தில் காண்பதாகக் கூறுகின்றார்.

(iii) சிறு குழந்தை விழியினில், திருவிளக்கில், மலர் தொடுப்பாளின் விரல் வளைவில், உழவனின் புதுநடையில், வயலில்

(iv) மங்கையொருத்தி (மாலை ஒன்றைத் தொடுப்பதற்காக) மலர்களைத்தன் கைகளில் எடுத்து அவற்றை நாரினில் தொடுத்துச் சேர்க்கும் நிலையில், அவளது விரல்களின் அசைவிலுள்ள நளினங்களில் அழகு என்பவள் ஒரு நாடகத்தையே நடாத்தி முடிக்கின்றாள்.

(v)
- விளைந்த நன்செய் நிலத்தினிலே என் விழியை நிறுத்தினாள்.
- என் நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்

**(2 x 05 = 10 புள்ளிகள்)**

## வினா இல. 05 : கடிதம் / விளம்பரம்

| | | புள்ளித்திட்டம் |
|---|---|---|
| அ. | அமைப்பு | 04 புள்ளிகள் |
| ஆ. | உள்ளடக்கம் | 08 புள்ளிகள் |
| இ. | மொழிநடை | 03 புள்ளிகள் |
| | | 15 புள்ளிகள் |

**கடிதம்**

அமைப்பு
- அனுப்புபவர் முகவரி
- உள்முகவரி (பெறுநர்)
- விளிப்பு
- தலைப்பு
- உள்ளடக்கம்
- முடிப்பு
- ஒப்பம்

உள்ளடக்கம்
- நிறுவனத்தின் கற்கைநெறி தொடர்பாக அறிந்த விதம்
- பயில விரும்பும் கற்கைநெறி
- பயில எடுக்கும் காலம்
- கட்டண விபரங்கள்

இவை தொடர்பான விவரங்களைக் கேட்டு எழுதுதல்

பக். 6 ஐப் பார்க்க.

**அல்லது**

**விளம்பரத்தின் அமைப்பு பேணப்படல் -**

**உள்ளடக்கம் -**

- புதிதாக தயாரிக்கப்பட்ட பால்மா பற்றிய விபரம்
- விற்பனையை அதிகரிப்பதற்கான உத்திகள்
- உற்பத்தி செய்த நிறுவனத்தின் பெயர்

**(15 புள்ளிகள்)**

## க.பொ.த. (சா.தர)
## உதவிக் கருத்தரங்கு - 2015
## தமிழ் மொழியும் இலக்கியமும் III
## விடையளித்தல் தொடர்பான வழிகாட்டி

**வினா இல. 01**

1. சுருக்கமான விடை எழுதுக.

(i) சொல்லில் பயனுடைய சொல்லுக; சொல்லில்
பயனிலாச் சொல் சொல்லற்க.

(ii) (அ) பிறர்க்கிடு பள்ளம் தனக்கிடு பள்ளம்.
(ஆ) யானை தன் தலையில் மண்ணள்ளிப் போடுதல்.

(iii) (அ) பெருவுடையார் ஆலயம் - இராஜராஜ சோழன் / அருண்மொழித் தேவர்
(ஆ) கங்கை கொண்ட சோழீசர் கற்கோயில் - இராஜேந்திர சோழன்

(iv) வறியவனாகப் படைத்தமைக்காக நிந்திக்கிறார்.

(v) (அ) ஸ்ரீமான் சோமசுந்தரம் / ரோஹினியின் தந்தை
(ஆ) குழந்தையின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது ஏங்கி நின்றார்.

(vi) (அ) பரஸ்தானம் :- பயணம் போவதற்கு எடுத்த பொருளை சுபநேரம் பார்த்து வெளியில் வைத்தல்.
(ஆ) க்ஷேமதண்டுலம் :- பாதுகாப்புக்காக கொண்டு செல்லும் மங்கல அரிசி

(vii) (அ) ஒட்டக்கூத்தரால்
(ஆ) கம்பருக்கு

(viii) கண்ணன் அர்ஜுனனுக்கு செய்த கீதோபதேசத்துக்கு ஒப்பிடப்படுகின்றது.

(ix) (அ) சுருள் அளகக்காடு - உருவகம்
(ஆ) கயற்கண்ணி - உவமை

(x) (அ) கொடை / கொடைச்சிறப்பு
(ஆ) தன்னலம் கருதாதவன் / தியாகி / தியாக உணர்வுள்ளவன்

**(02 x 10 = 20 புள்ளிகள்)**

பக். 7 ஐப் பார்க்க.

**வினா இல. 02**

2. (அ) பொருள் :

வலிய யானையின் மேல் பட்டு ஊடுருவும் அம்பானது மெல்லிய பஞ்சில் பாயாது. நெடிய இருப்புப் பாரைக்கு பிளவாத கருங்கற்பாறை பச்சை மரத்தின் வேருக்கு பிளந்து போகும். அதுபோல வன்சொற்கள் இனிய சொற்களை வெல்லமாட்டா.

சிறப்பு :

வன்சொற்களால் சாதிக்க முடியாததை இன்சொற்களால் சாதிக்கலாம் என்பது உவமை மூலம் விளக்கப்பட்டுள்ளது.

(ஆ) பொருள் :

ஆராய்ந்து எடுக்கப்பட்ட மணிகள் பதிக்கப்பட்ட அணிகலன்களையும், தளிரோடு ஒழுங்குபெற தொடுக்கப்பட்ட பூமாலையையும் அணிந்தவனான சேரன் உலா வரும்போது அவனைக் காண வீதிக் கதவை அடைத்தேன். நாணம் வந்து தடுக்கவே திரும்பிவிட்டேன். சீரும் சிறப்பும் பெருஞ்செல்வமும் படைத்த ஒருவர், காலம் செய்த சதியின் காரணமாக வறியவராக பெருஞ்செல்வந்தரிடம் உதவி கேட்கச் செல்லும்போது எப்படி வறுமை தூண்டச் சென்று, பின் நாணம் ஏற்படவே திரும்பி ஒரு முடிவுக்கும் வராது அலைவாரோ அதுபோல என் நெஞ்சமானது, கதவை அடைந்ததும் நாணத்தால் திரும்பி, பின் காதல் தூண்டச் சென்று பின் நாணத்தால் திரும்புதலாகி தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

சிறப்பு :

காதல் வசப்பட்ட தலைவியின் மனநிலை உவமையணியினூடாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

(இ) பொருள் :

பாரதியாரின் கவிச்சிறப்பை ஒரு சிறு கட்டுரையிலே விளக்கிக் காட்ட முடியாது. இயற்கையின் அழகு, பசுமை, இனிமை யாவற்றையும் இணைத்து நமக்கு அளித்துள்ளார். முத்து போன்ற வெண்ணிலா, ஒரு சில தென்னை மரங்கள் கீற்று, இளநீர், குயில் ஓசை என்பவற்றோடு, பாட்டோடு இணைந்திட ஒரு பத்தினிப் பெண்ணும் பராசக்தியின் காவலும் இருந்தால் தன் பாட்டுத்திறத்தால் இவ்வுலகத்தையே அருள்பாலிக்கலாம் என்ற கருத்தில் "காணி நிலம் வேண்டும்" என்று தொடங்கும் ஒரு பாடலை எழுதியுள்ளார். மனநிறைவு என்னும் கருத்துப் பற்றி பிறமொழியாளர் எழுதிய பாடல் எதுவும் இப்பாடலுக்கு ஈடாக மாட்டாது.

சிறப்பு :

பாரதியாரின் கவிச்சிறப்பு கூறப்பட்டுள்ளது. பாரதியாரின் கவிதையின் ஆழத்தை சிறிய வியாசத்தினுள் எழுதிவிட முடியாது எனக் கூறுவதிலிருந்து அவருடைய கவிதையின் சிறப்பு கூறப்பட்டிருக்கின்றது.

(ஈ) பொருள் :

இத்தகைய செல்வம் நிறைந்த அறிவில்லாதார் நிலத்துக்குப் பாரமாகவும், உலகத்திற்கு உற்ற பழியாகவும் அமைந்திருப்பதால், அவர்கள் இறந்து ஒழிவதே நாட்டுக்கு நன்மை கொடுப்பதாகும். அறிவற்ற செல்வரை உலகம் பழிக்கும். அறிவுடைய செல்வனது ஆக்கம் கண்டு உலகம் சந்தோசப்படும். அறிவுடைய செல்வன் தன் பொருளைப் பொருத்தமாகப் பயன்படுத்தி, இப்பிறப்பில் புகழும் மறுபிறப்பில் இன்பமும் அடைவான். அறிவிலாச் செல்வன் பயன்பட வாழும் பண்பறியா மூடனாய் இப்பிறப்பில் பழியும், மறுபிறப்பில் துன்பமும் அடைவான்.

சிறப்பு :

அறிவுடைய செல்வர்களின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. அவர்கள் செல்வத்தை முறையான பயனுள்ள செயல்களுக்குப் பயன்படுத்தி, இருமையிலும் சிறப்பு பெறுவர்.

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

பக். 8 ஐப் பார்க்க.

**வினா இல. 03**

3. (அ) கடற்றொழில் நிமித்தம் மீனவன் ஒருவன் ஆழ்கடலில் செல்கின்றான். செல்கின்றபோதும் கரையில் தன் வரவுக்காக எதிர்பார்த்திருக்கும் மனைவி பிள்ளையின் நினைப்பு அவன் மனதில் அவனோடு தொடர்ந்து செல்கின்றது. இதனைக் கவிஞர் குறியீட்டு வடிவில் இப்பாடலடிகள் மூலம் விளக்கி நிற்கின்றார்.

ஆழ்கடலில் ஆடுகின்ற தோணி - மீனவனின் மனம்
தாழம்பூ வாசம் - மனைவி பிள்ளைகளைக் குறிப்பதாக உள்ளது.
தரைக்காற்று சுமந்து வரும் - மீனவனின் நினைப்பு

(ஆ)
- தாழைமர வேலியே அவர்களது குடிசை எல்லை.
- இருப்பிடம் சிறுகுடிசை
- அதற்குள் தூங்கும் சிறுகுழந்தை - (இளங்குடும்பம்)
- அந்தச் சிறுகுடிசைக்குள் வாழும் அவர்களுக்கு, தோணியுடையான் கொடுக்கும் பிச்சையாக இரண்டு பிடிச்சோறு.
- இத்தகைய நிலையில் கோணல் நினைப்புடன் வாழும் அவர்களது வறுமை வாழ்க்கை.
- வாழ்வில் இருள் தொடரும் நிலை

(இ) இரவுப்பொழுது
- தரைக்காற்று பெருங்காற்றாக வீசும். அந்த இரவுப் பொழுது, வீசும் பெருங்காற்றோடு கும்மிருட்டாகக் காட்டப்படுகின்றது.
- குலை நடுக்கத்தைத் தரும் கடற்பெருக்கு.

பெண்ணின் மனநிலை
- விண்ணே தொடரும் விரிந்த கடலின் பின்னாடி விழிகள் தொடர தன்கணவனைத் தொழிலுக்காக அனுப்பிய மனைவி, கணவனது வருகைக்காகக் காத்திருக்கின்றாள்.
- கல்லுவைத்த கோயிலெல்லாம் கைகூப்பி வரம் இரப்பதாக மனைவி கணவனுக்காக ஏங்குகின்ற மனநிலை கொண்டவளாகக் காட்டப்படுகின்றாள்.

**(15 புள்ளிகள்)**

The National e-learning Portal for the General Education

**அல்லது**

அ. **வேண்டுதல்** :

இறைவனை வேண்டும் முறைகள்
- தந்தையின் பெருமையைக் காட்டி
- தன் குலப்பெருமையைக் காட்டி
- தன் ஒழுக்க நிலையின் உண்மையைக்காட்டி
- மனதில் கொண்டவனுக்கே மாலையிட வேண்டுதல்.

**மதிநுட்பம் :**

விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் இடையிலான வேறுபாட்டைக் காணும் முறைகள்

ஆ. **சுயம்வர மண்டபத்தில் இருந்தோரின் மன நிலைகள் :**
- தேவர்கள் - வெட்கி மனம் சுளித்தல், செந்தாமரை முகம் வெண்டாமரையாக வெளிறல்.
- மண்ணரசர் - மனங்களில் வன்மாலை சூடல் - மயக்கமடைதல்
- மக்கள் - உளம் களிகூரல்

**(15 புள்ளிகள்)**

பக். 9 ஐப் பார்க்க.

**வினா இல. 04**

4. கல்வியே அழியாச் செல்வம்

(அ) • ஒரு திங்கள் இரண்டு திங்களிற் கிழிந்து போகும் சீமைத் துணியாகவும் சிறிது கைதவறினாலும் கீழ் விழுந்து நொருங்கிப்போகும் மட்பாண்டங்களாகவும் கல்வி தவிர்ந்த ஏனைய செல்வங்களை ஆசிரியர் உருவகித்துக் காட்டியுள்ளார்.

• பன்னிரண்டு பதினைந்து திங்கள் கிழியாமல் வலுவாய் உள்ள நாட்டுப் புடைவைகளாகவும் கீழே தவறி விழுந்தாலும் உடையாமல் வலுவாய் உள்ள செப்புக் கலங்கள், பித்தளைகளாகவும் அழியாச் செல்வமாகிய கல்வியை உருவகித்துக் காட்டியுள்ளார்.

(05 புள்ளிகள்)

(ஆ) • சிறிது நேரமாயினும் நம்மைப் படைத்த இறைவனை நினைப்பவர்கள்.
• ஏனைய உயிர்களின் நன்மையைக் கருதுபவர்கள்.
• பசியாலும் நோயாலும் வருந்துபவர்க்கு உதவி செய்பவர்கள்.
• அறிவுடையோரால் செய்யப்பட்ட நூல்களை ஓதி உணர்பவர்கள்.
இத்தகைய ஆண், பெண் பாலாரை இன்று காண்பது அரிதினும் அரிதாகப் போய்விட்டதே என ஆசிரியர் மனம் வருந்தி நிற்கின்றார்.

(05 புள்ளிகள்)

(இ) • இறை சிந்தனையோடிருத்தல்.
• பிற உயிர்களின் துன்பத்தைப் போக்கும் ஈகை அறங்களைச் செய்தல்.
• நல் முயற்சிகளில் ஈடுபடுதல்.
• எல்லாம் தனக்கே என்று எண்ணாமல் இருத்தல்.
• தேடிய செல்வத்தைத் தனக்கும் பிறருக்கும் பல வகையால் நல்ல பயன்கள் விளையும்படி அதனைப் பயன்படுத்துதல்.
• சொல்லிலும் செயலிலும் பணிவுடைமை ; இன்சொல் பேசுதல்.

**(15 புள்ளிகள்)**

**அல்லது**

நக்ஷத்திரக் குழந்தைகள்

(அ) • குழந்தைகளின் மனங்களில் உண்மையின் சிறப்பை ஊட்டி வைத்தல். - இவ்வாறு நல்ல விழுமியங்களை ஊட்டுதல் குழந்தைப் பருவத்தில் இலகுவானது என ஆசிரியர் கருதுகின்றார்.

• பொய் பேசுவதால் ஏற்பட இருக்கும் தீமைகள், கெடுதல்கள் பற்றி அறிய வைத்தல்.

• குழந்தை உள்ளங்களில் நல்லவற்றையே பதிவு செய்தல்.

• நலமான மனித சமூகத்தை உருவாக்குதல். - (எண்ணங்களால், செயல்களால்)

• இயற்கை நிகழ்வுகளும் உண்மைத் தன்மைகளை விளக்கி நிகழ்கின்றன என்பதை குழந்தைகள் அறிய வைத்தல்.

(06 புள்ளிகள்)

(ஆ) • பெற்றோரிடத்தில் உள்ள பாசப்பிணைப்பைக் காட்டுதல்.

• எதனையும் கண்டறிவதில் ஆர்வம் காட்டுதல்.

• உண்மைத்தன்மை கொண்டவள்.

• இடங்களுக்கேற்ப செயற்பாடுகளில் மாற்றம், ஆர்வம் காட்டுதல்.

• இயற்கை நிகழ்வுகளைக் கண்டு இரசிப்பதில் ஆர்வம்.

• வெளிப்பாட்டுத்திறன் கொண்டவள். (06 புள்ளிகள்)

(இ) • நக்ஷத்திரம் ஒன்று வானத்திலிருந்து விழுவதால் மனம் துக்கமடைதல் - காரணம்.
யாரோ பொய் பேசிவிட்டார்கள் என்ற ஏக்கம் கொள்ளுதல்.

• பொய் பேச முற்பட்டால் துன்பம் நேரும் என்பதை அறிந்து கொள்ளல். (03 புள்ளிகள்)

பக். 10 ஐப் பார்க்க.

**வினா இல. 05**

5. • இரு பாடல்களிலும் காட்டப்படும் பெண்கள் தலைவனைப் பிரிந்து தனிமையில் வாடுபவர்கள்.

- ஆழிவாய்ச் சத்தம்...... எனும் பாடலில் வரும் பெண் இரவின் கொடுமையைப் போக்க விரைவாகச் சூரியன் வராதோ என ஏங்குகின்றாள்.

- மண்ணெல்லாம் உய்ய... எனும் பாடலில் வரும் பெண் குளிர்மையான இரவில் கூட சந்திரன் வேகமாக வருகை தந்து தன்னைக் காய்வதாக வருந்துகின்றாள்.

- இரவை அகற்றிப் பகலைச் செய்யும் சூரியனும், இரவின் பொழுதை பிரகாசமாக வைத்திருக்கும் சந்திரனும் உயிர்களுக்கு நன்மை செய்யினும் இங்கு இரு பெண்களையும் இவ்விரண்டும் வருத்துவதாகச் சித்திரிக்கப்படுகின்றது.

- சூரியனது காலை வரவின் தாமதமும், சந்திரனின் விரைவான வருகையும் இவ்விரு பெண்களது காதல் உள்ளத்தை வருத்துவனவாக அமைந்துள்ளன.

**(10 புள்ளிகள்)**

**வினா இல. 06**

6. (அ) • "சிங்கத்தைப் பார்த்த கண்ணால் செந்நாயைப் பார்ப்பேனோ?" என்ற கூற்றில் கருணாகரனை சிங்கமாகச் சிறப்பித்துக் கூறல்.

- "சக்கரக் கோட்டத்திலே விஜயதரபூபதிக்காக என் தந்தை செய்த போரிலே போர்க்களம் முழுவதும் கறங்கு போல் திரிந்து பகைவர் யானை சேனையெல்லாம் ஊதையிற்பட்ட பூளைப் பூவென்ன நூறி எறிந்து வாகை சூடியவன் கருணாகரனேயன்றோ"

- "அவனுடைய நடை மேகத்தின் கதிபோல இருக்கும்."

- "அவன் வரும்போது ஒரு தேவன் நடந்து வருவதுபோல இருக்கும்"

கருணாகரன் கொலையுண்ட பின்னர்

- "கருணா! உன்னை என் உயிர் எனவே நினைத்திருந்தேனே"

என்றவாறெல்லாம் மங்கையர்கரசியின் வாய்மொழியாக வரும் கூற்றுக்கள் அமைந்துள்ளன.

குறிப்பு : இக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டும் விளக்கப்படலாம்.

(ஆ) • "மங்கையர்க்கரசி பலவாறு பிரலாபித்துக்கொண்டு உயிரற்றுக்கிடக்கும் கருணாகரன் உடல் மீது விழுந்தாள்...... எழுந்தாள்.........

**தோற்றம் :**

- "அவள் உருவமே மாறுபட்டுப் போய்விட்டது. அவள் ரௌத்திராகாரமாக விளங்குகிறாள்.
- அந்த நள்ளிருளில் அவள் கண்கள் தழல்விட்டு எரிகின்றன.
- காளியே மனித உரு எடுத்தாற்போல நிற்கின்றாள்.
- மார்த்தாண்டன் நாகத்தைக் கண்ட பறவைபோல அவன் இருந்த இடத்தை விட்டு அசையவே இல்லை.

**தவிப்பு :**

- தனிமையில் நின்று காளியை வேண்டுதல்.
- கருணாகரனை அழைப்பதுபோல அரற்றுதல்.
- கருணாகரனை வஞ்சித்த மார்த்தாண்டனைப் பழிவாங்கியதைத் தன் கடமை எனக் கூறுதல்.
- மங்கையர்க்கரசி தன்னுயிரை மாய்த்தல். **(10 புள்ளிகள்)**

பக். 11 ஐப் பார்க்க.

**வினா இல. 07**

7. விமலன்

- தந்தையின் தோற்றப்பொலிவை, திறமைகளை செயற்பாடுகளை நினைத்துப் பெருமிதமடைதல்.
- தந்தையிடம் கதைகள் கேட்டு ரசிப்பதில் ஆர்வம் காட்டுதல்.
- பெரிய இடத்துப் பிள்ளையாக வளர்வதென்ற எண்ணம் கொண்டவன்.

தர்மலிங்கம்

- மகனிடத்தில் மிக்க விருப்பத்திற்குரிய தந்தை.
- தனது மகனை பெரிய இடத்துப் பிள்ளையாக வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவார்.
- தொழில் விசுவாசம் மிக்க தன்மையை வைத்தியசாலையிலும், பெரிய டொக்டரின் வீட்டும் காட்டிநிற்பவர்.
- உண்மையை நிலைநாட்ட வேண்டுமென எண்ணுபவர்.
- தேவையான விடயங்களில் நியாயப்படி நடக்க எண்ணுபவர்.

தங்கம்மா

- தாய் என்ற நிலையிலும், மனைவி என்ற தானத்திலும் குடும்பப் பொறுப்பை உணர்ந்து கடமையாற்றுபவர்.
- சமூகத்தாரின் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் தன் கணவனை தன் உள்ளத்தில் மேலான நிலையில் வைத்திருப்பவள்.

பெரிய டொக்டர் (பரஞ்சோதி)

- நோயாளிகளைக் கவனிப்பதிலும் பூமரங்களைப் பராமரிப்பதிலும் அதிக அக்கறை காட்டுபவர்.
- அதிகாரத் தன்மை மிக்க செயல்களில் ஈடுபடுபவர்.
- உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளை வெளியிடுபவர்.

பெரிய டொக்டர் மனைவி

- பிறரது ஏற்றம் கண்டு பொறுக்க முடியாதவள்.
- அகத்தில் தான் கொள்ளும் கோணல் நினைப்புக்களை முகத்தில் வெளிப்படையாகக் காட்டி நிற்பவள்.
- பிறர் மீது சந்தேகம் கொள்பவள்.

**(10 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education